Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 12 (27 · 12 · 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 312

## 1992இல் மரணப் பதிவுகள் உ. அ. அதிபர் பிரிவில்

அடுத்த ஆண்டு முதல் மரணப் பதிவுகள் அனைத்தும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்களிலேயே மேற்கொள்ளப்பட இருக்கின்றது. மேற்படி நடைமுறை அடுத்த ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு கொண்டுவரப்படவிருக்கின்றது. நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. மேற்படி அலுவலகங்களிலேயே காலம் பிந்திய மரணப்பதிவுகளும் மேற்கொள்ளப் படவிருக்கின்றது. (ஈ)

# பலமுனைத் தாக்குதல் தொடரும்: ஒரு ஆண்டில் புலிகளை அழிப்போம்

## ராணுவ தந்திரம்பற்றி கொப்பேகடுவ

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை முழுமையாக யுத்தத்திலீடுபடுத்தும்முயற்சியாக ஒரேசமயத்தில் பல இடங்களில் இராணுவத்தினர் நடவடிக்கையிலீடுபட்டுவருகின்றனர். இதன்மூலம பலவீனமடையும் புலிகளை அடுத்தவருட முடிவிற்குள் முற்றாக அழித்துவிட முடியும் என்று மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்தார்.

மேலும் 1992ம் ஆண்டு முடிவதற்கு முன்னர் வட-கிழக்கு மாகாணங்களில் புலிகளை முற்றாக ஒழிக்க முடியும் என வட மாகாணத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிறிலங்கா இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் வடக்கு, மேற்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக கூறிய கொப்பேகடுவ விடுதலைப் புலிகளை முழுமையாக யுத்தத்தில் ஈடுபடுத்தும் யுக்தியாக ஒரே சமயத்தில் பல இடங்களில் நடவடிக்கைகளை ராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றும், விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்வதே தமது நோக்க

(3ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளையும் நம்புகிறேன் பேச்சுக்களையும் நம்புகிறேன்

## சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்த போராட்டம்

### எதிரணி தொழிற்சங்கங்கள் கூட்டு நடவடிக்கை

(கொழும்பு)

மாதாந்த சம்பளமாக குறைந்தபட்சம் மூவாயிரம் ரூபாய் ஆவது இருக்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல முக்கிய பொருளாதாரக் கோரிக்கைகளை முன் வைத்து எதிரணியைச் சேர்ந்த கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனம் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறது.

இதற்கு முன்னோடியாக ஜனவரிமுதல் தொழிற்சங்கங்களின் பிரசாரக் கூட்டங்கள் கொழும்பில் முதலிலும் பின்னர் மாவட்ட ரீதியாகவும் நடைபெற இருக்கிறது.

மேளனத்தின் இந்த முடிவை அறிவிக்கும் முகமாக சிறி லங்கா சுதந்திரக்கட்சிக் காரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் வீடுகள் இராணுவத்தால் தகர்ப்பு

(ஈச்சமோட்டை)

பூநகரியில் உள்ள செட்டிய குறிச்சி, கறுக்காய்த்தீவு போன்ற இடங்களில் பொது மக்களின் பல எண்ணிக்கையான குடிமனைகளைச் சிறி லங்கா இராணுவத்தினர்

(3ஆம் பக்கம் பார்க்க)

## முன்னேற முயற்சி தோல்வி; ஓர் இராணுவம் பலி

(வவுனியா)

நொச்சிமோட்டைப் பகுதியில்

# புலிகளையும் நம்புகிறேன் பேச்சுக்களையும் நம்புகிறேன்

## - தொண்டா

(கொழும்பு)

''எனது பேச்சுவார்த்தையில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். விடுதலைப் புலிகள் மீதும் நம்பிக்கை கொண்டு நான் நாள் யாழ்ப்பாணம் செல்கின்றேன்'' என்று அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடந்த எட்டு ஆண்டுகளாக வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தத்திற்கு ஒரு முடிவு கிடைப்பதாயின் அதற்காக எதையும் தியாகஞ் செய்ய நான் தயார்.

மனிதன் பிறந்தால் இறக்க வேண்டும். ஆகையால் எனது முயற்சி பல கோணங்களில் தொடரும். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் அந்நியோன்னிய சம்பந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டமானுக்கு புலிகள் கடிதம்

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராஜா இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமானுக்கு மேலும் ஒரு கடிதத்தை எழுதியுள்ளார் என்றும், இக்கடிதத்தைச் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் 23 ஆம் திகதி அவரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதம் குறித்து தெரிவித்த எஸ். தொண்டமான் "தைப்பொங்கலுக்குப் பின்னர் நீங்கள் வரலாம்: அதற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் அகதி முகாமில் ஐவர் படுகொலை

(மன்னார்)

மன்னார் தீவில் சிறிலங்கா அரசாங்கத்தினரால் அமைக்கப்பட்டிருக்கும் அகதிகள் முகாமிலிருந்த தமிழ் மக்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இராணுவத்தினர் தூண்டுதலால் சமூகவிரோதக்கும்பலொன்று இந்நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், கடந்த இருவாரங்களில் மட்டும் ஐந்துபேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

# கிண்ணையடி கிராமத்தில் 400பேர் விசாரணையில்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை கிண்ணையடி கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறிலங்காராணுவத்தினர் ஆண்கள், பெண்கள் உட்பட நானூறு பேரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் ஊரடங்கு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று காலை ஆறு மணிமுதல் அமுலுக்கு வரும் ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல்வரை நீடிக்கும் எனக் கூட்டுப்படைத் தலைமையகம் கொழும்பில் அறிவித்துள்ளது.

# எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

திருவடிநிலை கடற்பகுதியில் இருந்து சிறிலங்கா கடற்படையினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடாத்தியிருக்கின்றனர்.

நேற்று மாலை 6.00 மணியளவில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ஈ)

இதற்கு முன்னோடியாக ஜனவரி முதல் தொழிற்சங்கங்களின் பிரசாரக் கூட்டங்கள் கொழும்பில் முதலிலும் பின்னர் மாவட்ட ரீதியாகவும் நடைபெற இருக்கிறது.

கூட்டுத் தொழிற்சங்க சம்

# ஊவாவில் மேலும் இருபது தமிழர்கள் கைது

(பதுளை)

பதுளை, பசறைப் பகுதிகளில் தமிழர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்ந்தும் இடம்பெறுவதாகத் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

கடந்த இரு நாட்களில் சுமார் இருபது பேருக்குமேல் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், தடுத்து வைக்கப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னேற முயற்சி தோல்வி; ஓர் இராணுவம் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டம் நொச்சிமோட்டைப் பகுதியில் இராணுவத்தினரும், சமூக விரோதிகளும் முன்னேற எடுத்த முயற்சி நேற்றுப் புலிகளின் எதிர்த்தாக்குதலால் முறியடிக்கப்பட்டன. இதே வேளை விடுதலைப் புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் சமூகவிரோதிகளைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

# பிரபாவை கைது செய்ய முடியாது: அதனால்தான் பேச முயல்கிறோம்

## தமிழகத்தில் அமைச்சர் செல்லச்சாமி

(திருச்சி)

பிரபாகரனை அவ்வளவு எளிதாகக் கைது செய்ய முடியாது. அதனால்தான் நாங்கள்கூட போருக்குப் பதிலாக அவருடன் பேச்சுவார்த்தை நடத்த முயல்கிறோம்.

இவ்வாறு இலங்கைத் தொழித்துறை ராஜாங்க அமைச்சர் திரு. செல்லச்சாமி ஜூனியர் விகடன் நிருபரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சமீபத்தில் திருச்சிக்குச் சென்றிருந்த அமைச்சரை ஜூனியர் விகடன் நிருபர் பேட்டி கண்டார். மேற்படி பேட்டி கடந்த 11 ஆம் திகதி ஜூனியர் விகடனில் வெளியாகியுள்ளது அப்பேட்டியின் விபரம் வருமாறு

கேள்வி:- விடுதலைப் புலிகளை ஒடுக்க பல்வேறு முயற்சிகள், யுத்தங்களைத் தொடர்ந்து கொண்டே பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று கூறுகிறீர்களே?

பதில்: விடுதலைப்புலிகளுக்கு எதிராக உண்மையில் நாங்கள் போரிட வேண்டும் என்ற நோக்கில் செயல்படவில்லை. அவர்கள் தாக்குதலுக்கு எதிராக எங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிதான் நடக்கிறது. உலகிலேயே இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப்போர் ஒரு சாதனை. உள்நாட்டுப்போர் தொடர்ந்து பல வருடங்களாக நடப்பது இலங்கையில்தான். இலங்கை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழகம் இணைந்த தமிழீழ ராஜ்யம்: புலிகளின் இலட்சியம் இதுவாம்

(டில்லி)

தமிழ் நாட்டையும், இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளையும் இணைத்துப் பெரியதொரு ஈழத்தை உருவாக்குவதுதான் விடுதலைப் புலிகளின் திட்டம் என்று புலிகளைப் பற்றி விசாரணை செய்து கொண்டிருக்கும் அதிகாரிகள் கருதுகிறார்களென்று 'இந்தியாருடே' டிசம்பர் இதழில் வெளிவந்த கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது, ஒரு ராஜ்ய சபா எம். பி. முன்னாள் அமைச்சர்கள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவலைகள்

தீவக மண்ணில்
1971 . 11 . 03

ஆனையிறவு
களத்தில்
1990 . 12 . 27



### லெப்டினன்ட் குமரன்
[து. உதயகுமார்]

விடுதலை வேட்கை கொண்டு
பாசத்தை வெறுத்தான்
உணர்வுகளை கட்டெடுத்தான் புலிகள்
நாரிப் புத்திரனாம் குமரன்
புலிப்பாசப் பாய்ந்திட்டான். உரிமை
என்னும் உணர்வால் தமிழர் தன்மானம்
காக்க ஆனையிறவு சமர் தன்னில்
பகைவனை விரட்டி ஓட்ட மானமுள்ள
மாவீரனாய் ஆனான் ஓராண்டு
ஓடினாலும் அவன் ஒளியுள்ள திருமுகத்தை
உள்ளம் மறந்திடுமோ!

குமரன் வீதி, புங்குடுதீவு - 2 — உள்பிரிவால் வாடும் சகோதரி

(R/2039)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொழிலாளர் கல்விக் கழகத்தினரால் நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 2-30 மணிக்கு புவியியல் மண்டபத்தில் "கால் நடை நோய்களும் அதற்கான தீர்வுகளும்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி (திருமதி) சு. தனபாலசிங்கம் அவர்கள் கருத்துரை வழங்குவார். அனைவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நி. இ. உதயகுமார் — தலைவர்
வி. இரத்தினகுமார் — செயலாளர்

(B/3494)

## யா/மெதடிஸ்தபெண்கள் உயர்பாடசாலை,
பருத்தித்துறை.

### ஆண்டு 7 அனுமதி

1990 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் மேற்படி ஆண்டிற்கு அனுமதி பெற விரும்பின் 03-01-1992 க்கு முன் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவும். ஏனைய மாணவர்களுக்கான அனுமதிப்பரீட்சை 03-01-92 இல் நடைபெறும். ஏனைய விபரங்களுக்கு 25-12-91 ஈழநாதம் பத்திரிகையைப் பார்க்குக.

அதிபர்

(R/2041)

## 28 - 12 - 91 (சனி)

1-30 — 2-30

**MORPHOLOGY**

**உருவவியல்**

**தாவரவியல்**

**ஐங்கரநேசன்**

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்

(B-6388)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 12 - 27

1987 ஆம் ஆண்டு ஏழாலை தினத்தில் தெல்லிப்பளையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது வீரச்சாவெய்திய

ராம் (கைலாசலிங்கம் அகிலன் - வீமன்காமம், தெல்லிப்பளை)

கோப்பாயில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

மதன் (கந்தசாமி சிவானந்தன் - கப்புது, கரவெட்டி)

மட்டக்களப்பில் இந்தியப் படையினர் மற்றும் காவற்றுறையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 30 தமிழர்கள் - ஏறாவூர் முகாமிலிருந்து இந்தியப் படையினர் கண்மூடித்தனமாக ஏவிய எறிகணை செல்வெடி மருத்துவமனை மீது வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட சிறுவன்,

## ஈராண்டு நினைவலைகள்



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





## செல்வி யோகராசா யோதிகா
(யோயோ)

மண்ணிற்கு ஏக மகளாய் வந்தது 22-10-1986

விண்ணிற்கு ஏகும் மகளாய் சென்றது 19-12-1989

திதி: 27-12-1991

அன்புமனை ஆசைமனை இப்பாரினிலே
பாசமலராய் நீ மலர்ந்தாய்
எட்டு ஆண்டுகளின் பின் வந்தாய்
ஏக மலராய் நீ மலர்ந்தாய்
எம் இதயம் குளிர வைத்தாய்!

கொஞ்சும் மழலையினைப் பேசி மகிழ்ந்தாய்
கெஞ்சி விளையாட ஓடி வந்தாய்
முருகன் அருளால் நீ பிறந்தாய்
மூன்று வயதினில் எமைப் பிரிந்தாய்
மண்ணினில் விளையாடும் வயதினில் – நீ
விண்ணினில் விளையாட ஏகி விட்டாய்!

நோயும் வந்ததுவோ யோயோ உனக்கு – நீ
எமைப் பிரிவாயென்று நாம் நினைக்கவில்லையம்மா
பந்தமுடன் நாமிருக்கப் பரிதவிக்கச் சென்றாயோ
சொந்தமுடன் நாமிருந்தோம் சொர்க்கம் நீ
சென்றாயோ?
ஆண்டு மறைந்து ஆண்டு இரண்டானாலும்
ஆறாத துயரம்மா

மறவாத உன் நினைவு எம்மனதை உருக்குதம்மா
மலரும் நாளதனில் எம் மனதில் வந்திடுவாய்
இளம்பிறை முழு நிலவாய் இனியும் நீ
வருவாய்!

வேலணை கிழக்கு,
வேலணை 2,

விண்ணிற்கு ஏகிவிட்ட
உம்மை மண்ணில் தேடிவாடும்,
அப்பா, அம்மா, அண்ணாமார்,
உறவினர்கள்.

(R/2048)



## வீரவேங்கை மிரேஸ்
(இராஜலிங்கம் - சதீஸ்குமரன்)

தாயின் மடியில் 27-05-1972

வன்னி மண்ணில் 27-12-1989

(இவர் செட்டிகுளத்தில் சமூக விரோதிகளுடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

வன்னியின் தவப்பிறப்பு
தியாகத்தின் தனிச்சின்னம்

எரிமலையாய் கிளர்ந்தெழுந்து
இனம் காத்து மொழி காத்து

எல்லை மண் காத்து நின்றான்
தெருவெல்லாம் அவன் நாமம்

புலி என்றால் மிரேஸ் என்பர்
புவி தன்னிலே காவியமாகினாய்!

சதீஸ்குமரன் வீதி,
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

உன்பிரிவால் வாடும்
பெற்றோர், அண்ணன்மார்
அக்கா, அம்மாச்சி
மற்றும் குடும்பத்தினர்.

(R/2003)

[illegible] காவற்றுறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைதுசெய்யப்பட்ட 30 தமிழர்கள் - ஏறாவூர் முகாமிலிருந்து இந்தியப் படையினர் கண்மூடித்தனமாக ஏவிய எறிகணை செல்லடி மருத்துவமனை மீது வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட சிறுவன், மூதாட்டி, மருத்துவமனை ஊழியர்

1988 ஆம் ஆண்டு பூநொச்சிமுனையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

2 ஆம் லெப். அர்ஜுன் (சீனித்தம்பி தயாளன் - வள்ளிபுர ஒழுங்கை, ஆரையம்பதி, மட்டக்களப்பு)

ராஜன் (தம்பிராசா - மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு)

2 ஆம் லெப். அஜித் (சுப்பிரமணியம் தேவராஜா - ஆரையம்பதி, மட்டக்களப்பு)

உருத்திரன் (விநாயகமூர்த்தி - நாவற்குடா, மட்டக்களப்பு)

நிக்கலஸ் (சிறீமுருகன் - கழாவடிக்கொலனி)

1989 ஆம் ஆண்டு நெளுக்குளத்தில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

மிரேஸ் (இராஜலிங்கம் சதீஸ்குமரன் சதீஸ்குமரன் வீதி, தெணியம்பை, வல்வெட்டித்துறை)

1990 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

மாறன் (சவரிமுத்து அமலதாஸ் - [illegible] வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி)

செம்பவளம் (செல்லத்துரை யாழின்பராசா தென்னியங்குளம், துணுக்காய்)

லெப். குமரன் (துரைலிங்கம் உதயகுமார் குமரன் வீதி புங்குடுதீவு-2)

வடமராட்சிப் பகுதியில் பரவலாக சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப்புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3691)

## ❀ சிந்தனைக்கு ❀

தவறு செய்வதில் தொடர்ந்து முனைவது தவறுக்குச் சமாதானம் ஆகாது; தவறின் சுமையை மேலும் கனமாக்கும்.

—வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 27-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 023 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# உதவிக்கு நிபந்தனை; பெறுபவர் ஆத்திரம்

மனித உரிமைகள் போல், பொருளாதார உரிமைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை என தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் வெளியிட்ட 'சார்க்' பிரகடனம் தொடர்பாக மனித உரிமைகள் குழுக்கள் பெரும் அதிருப்தி கொண்டுள்ளன.

அண்மைக் காலத்தில் உதவி வழங்கும் நாடுகள், உதவி பெறும் நாடுகளில் நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாய் அக்கறை காட்டி வருகின்றன. உதவிகள் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் எனில் மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளை உதவி பெறும் நாட்டு அரசாங்கங்கள் நிறுத்த வேண்டும் என வற்புறுத்தத் தொடங்கியுள்ளன. மனித உரிமை மீறல்கள் தொடர்பான இவ்வற்புறுத்தல்கள் இந்த உதவி பெறும் நாடுகளைப் பெரும் இரங்களுக்கு உள்ளாக்கியுள்ளன.

இதன் காரணமாக தனியாகவும் கூட்டாகவும் பொருளாதார உதவிகளையும், மனித உரிமை மீறல்களையும் இணைத்துப் பார்ப்பதை உதவிபெறும் நாடுகள் வன்மையாக எதிர்த்து வருகின்றன. இதன் வெளிப்பாடே அண்மையில் வெனிசுலாவில் நடைபெற்ற கைத்தொழில் வளர்ச்சி அடைந்த பதினைந்து வளர்முக நாடுகளின் (ஜி 15) மாநாட்டில் வெளியிடப்பட்ட கண்டனமும் கொழும்பு சார்க் மாநாட்டில் வெளியிடப்பட்ட ஆட்சேபமும் ஆகும். இவ் விவகாரத்தில் இந்தோனேசியா இன்னும் சற்று மேலே போய் மனித உரிமைகளுடன் பொருளாதார உதவியையும் இணைப்பதாயின் உதவியே தேவையில்லை என அறிவித்துள்ளது.

வயிற்றுக்குப் போதுமான உணவு இல்லாமையினால் மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவதில் அர்த்தம் எதுவும் இல்லை என அண்மையில் 'சார்க்' உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு வந்த இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முதலாவது பொருளாதார உதவி செய்வதாலேயே மனித உரிமைகளைப் பற்றிப் பேசலாம் என்பது அவரது கருத்தாகும். இதுவே பொதுவான இன்று உதவி பெறும் நாடுகளின் நிலைப்பாடாகும்.

உதவி பெறும் நாடுகளின் வாதம் கேட்பதற்கு அழகாக இருப்பினும், அதற்கு அவை கூறும் காரணங்கள் ஏற்புடையவை அல்ல. பொருளாதார நெருக்கடியே மனித உரிமைகளுக்குக் காரணம் என்ற கூற்று இந்த நாடுகளின் அதிகார வர்க்கத்தினரும், பேரினவாதிகளும் உண்மை நிலையை மறைப்பதற்கான ஒரு சாட்டேயாகும்.

இந்த உதவி பெறும் நாடுகளில் அரச பயங்கரவாதம் பல்வேறு காரணங்களுக்காக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தமது அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்காகவும், மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்குவதற்கும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை ஒடுக்குவதற்கும் பேரினவாதத்தின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காகவும் அரசபயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதேவேளை இவ் அடக்குமுறைக்கென பெருமளவு நிதிகள் (வெளிநாட்டு உதவிகள் உட்பட) இதற்குத்திசை திருப்பி விடப்பட்டும் உள்ளன. ஆயுதக் கொள்வனவில் பெருமளவுநிதியைச் செலவிடுகின்றன வறுமைக் கோட்டிற்குக் கீழ் 50 வீத மக்களைக் கொண்ட இந்தியா கடந்த தசாப்தத்தில் ஐந்து முன்னணி ஆயுத இறக்குமதி நாடுகளில் ஒன்றாகும்.

இந்த நிலையில் உதவி வழங்கும் நாடுகளின் நிபந்தனைகள் உதவி பெறும் நாடுகளின் அதிகார வர்க்கத்தினரையும், பேரினவாதிகளையும் நெருக்கடியில் தள்ளியுள்ளன. இவ் அதிகார வர்க்கத்தினர் சகலரும் ஒரே அணியினர். இதனால் ஒன்று சேர்ந்து எதிர்க்க முற்பட்டுள்ளனர் இது இந்த நாடுகளின் அதிகார வர்க்கத்தினரின் சர்வாதிகாரப் போக்கின் வெளிப்பாடேயாகும்.

# "கவலையோடும் நம்பிக்கையோடும் பதவி விலகுகின்றேன்"

-கொர்பசேவ்

(மொஸ்கோ)

1985 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பெரஸ்ரொய்கா, அரசியல் பொருளாதார சீர்திருத்தங்கள் சரியானதே என்றும் அதுவே உலகமாற்றத்திற்கு வழிவகுத்தது என்றும் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு சோவியத் முழுவதுமாக ஒலிபரப்பப்பட்ட பத்து நிமிடங்களுக்கான உரையில் கொர்பசேவ் இதனைக் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றிய அவர்.

சோவியத் யூனியன் பிளவுபடுவதை தடுக்க நான் எடுத்த முயற்சிகள் பயனளிக்காமல் போனமையிட்டு கவலைப்படும் அதே நேரம் பொதுநலவாய அமைப்பு வெற்றி பெறவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

ஒருபுறத்தில் கவலையோடும், மறுபுறத்தில் புதிய நம்பிக்கையோடும் நான் பதவியில் இருந்து விலகுகின்றேன்.

சோவியத் சமுதாயம் விடுதலை பெற்றுள்ளது. நீண்டகாலமாக சோவியத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்த அடக்குமுறை ஆட்சி நீக்கப்பட்டுள்ளது. சுதந்திரத் தேர்தல்கள், பத்திரிகைச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம், பல கட்சி அரசியல் முறை, முதலியன நடைமுறைக்கு வர உள்ளன. மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சந்தைப் பொருளாதார அமைப்பிற்கும் பல தரப்பட்ட சொத்துடைமைக்கும் அந்தஸ்து இடப்படுகின்றது.

ஆனால் பொதுநலவமைப்பு அமைக்கப்பட்டதை என்னால் ஏற்க முடியவில்லை.

ஏனென்றால் இந்த அமைப்பினால் மக்கள் மாபெரும் வல்லரசு ஒன்றின் குடியுரிமையை இழந்து விடுவார்கள்.

இந்த நாட்டின் மக்கள் மாபெரும் வல்லரசின் பிரஜைகள் என்ற நிலையிலிருந்து மாற்றமடைவதையிட்டு தான் கவலைப்படுவதாகவும் கொர்பசேவ் குறிப்பிட்டார்.

சோவியத் யூனியனின் பிரதேச ஒருமைப்பாட்டையும், நாட்டையும் பேணிப் பராமரிப்பதையே நான் ஆதரிக்கிறேன், ஆனால், இப்போது நடந்துள்ள நடப்புக்களோ வித்தியாசமான வேறு ஒரு பாதையில் சென்று விட்டது. ஆதலால் பதவியில் தொடர்ந்து இருக்க முடியாமல் போய் விட்டது.

அத்துடன் புதிய பொதுநல அமைப்பிற்கு ஆதரவாக சீர்திருத்தங்களுக்கு விசுவாசமாக நான் மேலும் உழைக்கப் போகிறேன் என்றும் கொர்பசேவ் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேநேரம் இவரது பதவி விலகல் குறித்து உலகின் பல தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"உலக வரலாற்றில் கொர்பசேவின் இடம் பாதுகாப்பாக உள்ளது" என்று பிரித்தானிய பிரதமர் ஜோன் மேயரும்,

"கொர்பசேவின் சாதனைகள் வரலாற்றின் ஒரு பகுதியாகவே தொடர்ந்தும் இருக்க வரும்" என்று ஜப்பானிய பிரதம மந்திரியும்,

"சோவியத் யூனியனின் சரிவுக்கு கொர்பசேவ்தான் காரணம்" என்று சீனப் பிரதமரும் தெரிவித்துள்ளனர்.

புலிகளையும்

தை ஏற்படுத்துவதே எனது பூரண நோக்கமாகும்.

இதன் பின்னர் பரஸ்பரம் புரிந்து கொள்ளும் வகையில் இரு தரப்பினருக்கும் பேச்சுவார்த்தை நடக்கும். அதன் பிறகு சமாதானம் கிட்டும். இதுவே எனது புதுவருட நம்பிக்கை. புதுவருடத்தில் புலிகளுடன் பேசி புதுயுகமொன்றை சமைக்கும் முயற்சிப்போம் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

இன்றைய வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு எனது யோசனைகள் முழுமையானதாக இல்லாவிட்டாலும் சகல தரப்பினருடனும் பேசி ஒரு நல்ல முடிவு காணும் நோக்கமாகவே நான் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போகின்றேன் என்றும் தொண்டமான் தெரிவித்துள்ளார். நான் நம்பிக்கையுடன் செயற்படுகின்றேன் எனது முயற்சியை கைவிடமாட்டேன் எவரும் எதையும் கூறட்டும் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

தமிழகம்

முன்னாள் எம். எல் ஏக்கள் உட்பட பல அரசியல்வாதிகளை எஸ் ஐ. டி. தான் தயாரித்து வரும் குற்றப் பத்திரிகையில் குற்றத்திற்கு துணை நின்றவர்களாகக் குறிப்பிடுகின்றது. கியூ பிராஞ்ச் அவர்களில் சிலரை 'டடா'வின் கீழ் கைது செய்யத்தொடங்கியிருக்கிறது. இந்த அரசியல்வாதிகளுக்கு அகண்ட ஈழம் என்ற விடுதலைப் புலிகளின் கனவு பற்றி நன்கு தெரியும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

தொண்டமானுக்கு

கால திகதியை முன்கூட்டியே அறிவித்தால் உரிய ஒழுங்குகளைச் செய்வது எமக்கு வசதியாக இருக்கும்" என அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

சிறுவர்களின்

# நேர்மையைப் பாராட்டி மா. செயலகம் சான்றிதழ்

(மண்டைதீவு)

கண்டெடுத்த நகைப் பொதியை நேர்மையாக ஒப்படைத்த மண்டைதீவுச் சிறுவர்களின் நேர்மையையும், நல்ல பண்பையும் பாராட்டியும். மாவட்ட செயலகத்தினால் நற்சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் நகரப் பகுதியில் வசித்து வரும் சுதர்சன், பிரதீபன், பிரபாகரன் ஆகிய மூன்று சிறுவர்களும் விறகு எடுக்கச் சென்ற இடத்தில் நகைப் பொதி ஒன்றைக் கண்டெடுத்து அதனை தந்தையாரான மாணிக்க வாசகரிடம் ஒப்படைத்தனர்.

அவர் அதனை சிற்றூரவைத் தலைவரூடாக தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சேரலாதனிடம் ஒப்படைத்தார்.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில், சிற்றூரவை உறுப்பினர்களுக்கு கலந்துரையாடலின் போது மேற்படி மூன்று சிறுவர்களையும் அழைத்து தீவக நிர்வாகப் பொறுப்பாளர் அவர்களைப் பாராட்டியதுடன் பெறுமதியான பொருட்களையும் பரிசாக வழங்கியதுடன் நற்சான்றிதழும் வழங்கப்பட்டது. (88)

இண்ணையடி

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும், இவர்களில் பதினைந்து பேர் மேல் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பதினைந்து பேரில் ஒருவரைத் தவிர்ந்த ஏனையோர் விசாரணைக்கும் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஊவாவில்

பட்டுக்கணக்கில் ஒரு சிலர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஆளுங்கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும்.

நமுனுகல பன்வெட்டுவ என்ற இடத்தில் கண்டி சந்தையா என்றழைக்கப்படும் நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்றும், இவர் அண்மையில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பலமுனை

மெனவும் தெரிவித்தார்.

அப்பாவிப் பொதுமக்கள் பாதிப்படையக்கூடாது என்ற காரணத்தினாலேயே அவதானத்துடனும் மெதுவாகவும் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும் கொட்டேகொட தெரிவித்தார்.

பூநகரியில்

குண்டு வைத்துத் தரைமட்டமாக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட வீடுகளில் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள் படையினரால் களவாடப்பட்டிருப்பதாகவும், கால்நடைகளை இராணுவத்தினர் தமது உணவுக்குப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

சம்பள

பாலையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சம்மேளனத்தின் இணை பொதுச் செயலாளர் இதுபற்றிக் குறிப்பிடுகையில்;

சம்மேளனத்தின் சார்பில் அரசாங்கத்திடம் பல கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம். இன்னமும் சாதகமான பதில் கிடைக்கவில்லை எனவே எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து பின்னர் தொழிற்சங்க ரீதியிலான நடவடிக்கைகளில் நாம் இறங்கவுள்ளோம்.

ஊழியர்களின் அடிப்படை மாதாந்த ஊதியம் 3000 ரூபாவாக இருக்க வேண்டும். அரச தனியார் கூட்டுத்தாபன ஊழியருக்கு 50 சதவீதமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் வாழ்க்கைச் செலவுக் கட்டணம் ஒன்றுக்கு வழங்கப்படும் படி ஐந்து ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் கேட்டிருந்தோம் எனவும் குறிப்பிட்டார்.

முன்னேற

வவுனியாவில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் விமானத் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மேலும் வவுனியா மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் இராணுவத்தினர் உக்கிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுவதாக ... தலைமையகம் கொழும்பில் அறிவித்துள்ளது

# ரஷ்யா உட்பட ஆறு குடியரசுகள் அமெரிக்காவால் அங்கீகாரம்

## கெடுபிடிப்போரில் வென்றதாக' புஷ் பெருமிதம்

(வாஷிங்டன்)

ரஷ்யாவையும், சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து உருவெடுக்கும் மற்ற அரசுகளையும் அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு வாஷிங்டனில் தொலைக்காட்சி மூலம் நத்தார் வாழ்த்து அறிவித்த ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் இதனைத் தெரிவித்தார். ஐ. நா. பாதுகாப்புச்சபையில் சோவியத் யூனியனுக்கு அளித்த நிரந்தர இடத்தை ரஷ்யாவிற்கு வழங்கவும் அங்கீகாரம் அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா குறிப்பிட்டுள்ள ஜனநாயகம் மற்றும் பாதுகாப்புக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் அரசுகளுடன் மட்டும்தான் அமெரிக்கா ராஜீய உறவுகளை வைத்துக் கொள்ளும் என்றும்,

கெடுபிடிப்போரில் அமெரிக்கா வென்றுவிட்டது என்பதை பெருமையுடன் பிரகடனப்படுத்துகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

இதே நேரம் ஐரோப்பிய சமூகம் ரஷ்யாவிற்கான அங்கீகாரத்தை அறிவித்துள்ளது. அத்துடன் முன்னைய சோவியத் குடியரசுகளுடனும் ராஜீயத்துறையிலான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவதாகவும், தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவும் ரஷ்யாவை அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளது. ''பழையசோவியத்யூனியனின் ஒரு தொடர்ச்சியாகவே ரஷ்யாவை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்'' என்று பிரித்தானிய பிரதமர் ஜோன்மேயர் தெரிவித்துள்ளார்.

மேற்காசிய அமைதிப் பேச்சுவார்த்தையின் இணைத்தலைமைப் பதவிவகித்த சோவியத் யூனியனின் இடத்தை ரஷ்யாவிற்கு வழங்க அனுமதித்திருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# டாக்டர்கள் பற்றாக்குறை; மக்கள் பெரும் அவதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையினால் இவ்வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் பலத்த இன்னல்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருவதாக நோயாளர்கள் பலத்த புகார் செய்துள்ளனர்.

இவ்வைத்திய சாலையில் பன்னிரெண்டு வைத்திய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டியதாக இருந்தும் மாவட்ட வைத்திய அதிகாரியைத் தவிர இன்னும் ஒரு வைத்திய அதிகாரி மட்டுமே பணியாற்றிவருகின்றனர். இதனால் இவ்வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரிகளை அனுப்பிவைக்க யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையின் கோரிக்கையின் பேரில் சில டாக்டர்கள் சேவை அடிப்படையில் பணியாற்றி வருவதனாலேயே இவ்வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளின் ஓரளவு தேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். (25)

# தமிழர்களுக்குப் பாதுகாப்பு; மத்திய அரசு தவறிவிட்டது

(சென்னை)

கர்நாடகமாநிலத்தில் தமிழ் மக்கள் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டதாக மத்திய அரசைத் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குறை கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கர்நாடகத்தில் தமிழ்மக்கள் தாக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசும் கர்நாடகத்தில் இருந்து அகதிகளாக வரும் தமிழர்களுக்கு உதவி செய்வதோடு நின்றுவிடாமல் கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் தாக்கப்படுவதை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் அடுத்த ஆண்டு (1992) ஆண்டு 7இல் மாணவிகளை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் பூர்த்தியாக்கப்பட்டு 31-12-1991ற்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் கல்லூரி அதிபர் திருமதி லீலா சந்திரசேகரம் அறிவித்துள்ளார்.

1990 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெய்திய மாணவிகள் அடுத்த ஆண்டு இக் கல்லூரியில் ஆண்டு 7ற்கு அனுமதி பெற விரும்பின் 03-01-1992ற்கு முன் கல்லூரி அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் ஏனைய மாணவிகளுக்கான அனுமதிப் பரீட்சை 03-01-1992 இல் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# மன்னார் ஆசிரியர்களை வேலைக்கு திரும்ப பணிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்திலுள்ள சகல ஆசிரியர்களும் 1992 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று தாங்கள் கடமையாற்றிய பாடசாலைகளுக்கு வேலைக்குச் செல்லுமாறு அரசாங்கம் கேட்டுள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கேட்டுள்ளார்.

இத்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையாகவே ஆசிரியர்களை வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்ததாகவும் தெரிவித்துள்ளது.

# பிரிவுச் செயலாளரிடம் செயலக அதிகாரங்கள்

(கொழும்பு)

கச்சேரிகளின் அதிகாரங்களையும், கடமைகளையும் பிரிவுச் செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 1992 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பாக அமுல்படுத்தப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த முடிவினை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாதான் எடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பத்திரிகை விநியோகஸ்தர் சைக்கிள் திருட்டு

அரியாலையைச் சேர்ந்த பத்திரிகை விற்பனையாளரான கிருஷ்ணசாமி என்பவரது சைக்கிள், பத்திரிகைகள் என்பன திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது நேற்று (26-12-91) அதிகாலை வேளையில் மேற்படி நபர் சுமார் 120 பத்திரிகை பிரதிகளுடன் பெருமாள் கோயிலடியில் உள்ள கடையொன்றுக்கு பத்திரிகையை விநியோகித்து விட்டு வந்து பார்த்தபோது அவரது சைக்கிளும் 120 பத்திரிகைகளும் களவாடப்பட்டுள்ளன.

# இந்திய அணு நீர்மூழ்கி; 10 ஆண்டில் தயாராகிவிடும்

இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் இன்னும் பத்து ஆண்டுகளில் தயாராகிவிடும் என சென்னையிலிருந்து வெளிவரும் 'புரண்ட்லைன்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. இதன் கட்டுமானத்திற்கான பூர்வாங்கவேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக மூன்றாண்டுகளுக்கு முன் சோவியத்யூனியனிடம் இருந்து ஐ. என் எஸ் சக்ரா என்ற அணுசக்தி நீர்மூழ்கி வாங்கப்பட்டதாகவும் புரண்ட்லைன் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

---

பிரபானை

யின் வளர்ச்சியும் இந்தப் போரினால் தடுக்கப்படுகிறது. பாதுகாப்பு ஆயுதங்களுக்கு என்று ஒரு தொகையைக் கட்டாயம் ஒதுக்கியாகவே வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவேதான் நாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராகிறோம்.

கேள்வி: இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளை இன்னமும் தொடர்கிறதா?

பதில்: அவர்களை, நாங்கள் அரசியல்ரீதியாக அணுகவேண்டும் என்பதில் ஆவலாக இருக்கின்றோம். இதற்காக இலங்கை ஜனாதிபதி சர்வகட்சி மாநாடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்துள்ளார். இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளும் இடம்பெற்றுள்ளன. இவைஒன்றுசேர்ந்து 'பார்லிமெண்ட் செலக்ட் கமிட்டி' அமைத்து மூன்று மாதங்களுக்குள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தன் ஆலோசனைகளை இலங்கை அரசிற்குத் தெரிவிக்க வேண்டும். இதில் நாடாளுமன்றக் கட்சிகள் மற்றும் நாடாளுமன்றத்திற்கு வெளியிலுள்ள கட்சிகளும் இடம்பெறும்.

கேள்வி: அப்படியென்றால் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒரு கட்சியாக அங்கீகாரம் செய்யப்படுமா?

பதில்: அவர்கள் விரும்பினால் நிச்சயமாக அங்கீகரிப்போம். ஆனால் அரசியல் கட்சியாகச் செயற்பட அவர்கள் விரும்பமாட்டார்கள். அதற்கு உடன்படவும் மாட்டார்கள் என்று தோன்றுகிறது.

கேள்வி: இந்திய அரசு பிரபாகரனைக் கைதுசெய்ய முயற்சிமேற்கொண்டுள்ளதே. இதுபோல இலங்கை அரசு பிரபாகரனுக்கெதிராக நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா?

பதில்: இந்திய அரசு இதுவி பற்றி இதுவரை இலங்கை அரசின் உதவியை நாடவில்லை. அப்படி நாடினால் ஒருக்கால் நாங்கள் உதவ முடியும். பிரபாகரனை அவ்வளவு எளிதாகக் கைது செய்யஇயலாது. நாங்களும்கூட போருக்குப்பதில் அவருடன் பேச்சு வார்த்தை நடத்தத்தான் முயல்கிறோம்.

கேள்வி: விடுதலைப்புலிகளுடன் பிரேமதாசா அரசு ஓர் ஒப்பந்தம் செய்து. கொண்டு இந்தியாவிற்கு எதிராகச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டதே?

பதில்; இது வீண் வதந்தி இலங்கை - இந்திய அரசுகளிடையே பகையை உண்டாக்கச் சில சக்திகள் அவிழ்த்துவிடும் கட்டுக்கதைகள்தான் இவை. (தி)


## நிகழ்ச்சி இடமாற்ற அறிவித்தலும் நன்றி நவிலலும்

வேலணைக் கல்விக்கோட்டம் வசதிகுறைந்த மாணவர்களின் கல்விஉபகரணங்கள் வழங்கும் நிதிக்காக அளிக்கும்

**மாபெரும் கலைவிழா**

யா / இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் 28 - 12 - 91

காலை 09.00 மணிக்கு நடைபெறும்

[முன்பு அறிவிக்கப்பட்டதுபோல ஸ்ரீதர் திரையரங்கில் நடைபெறமாட்டாது]

❋ நிதி உதவி புரிந்து ஆதரவளித்தவர்கள் அனைவருக்கும் அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. புலேந்திரன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

(R/2043)

## A/L 93

கலை, வர்த்தகம், விஞ்ஞானம்

புதிய பிரிவுகள்

ஆரம்பம்

28 - 12 - 91 (சனி)

## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/3687)

## NEW MASTER INSTITUTE Jaffna

Pure, Applied Maths A/L

(92 Aug)

ஆரம்பம்: 28-12-1991

சனிக்கிழமை

SAT 12-00 1-30 வட்டம்
01 30—03 00 ஆப்பு

SUN 12 00—01 30
வகையீட்டின் பிரயோகம்
01 30—03 00
உராய்வு

93 (AUG) பிரிவு II

ஆரம்பம் - 28.12.1991

(03 30—05 30)

ஆசிரியர்:

திரு. கிருஷ்ணா

(B-3681)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.